1979 மார்ச் 19]

திருக்கோயில்களை அறநிலையத் துறையே மேற்கொண்டால் இத்தகைய சிரமங்கள் வராது என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோயிலில் பணியாற்றி நீக்கப்பட்டவர்கள் இனி யாரேனும் சேர்க்கப்படாமல் இருந்தால் அப்படி இருப்பவர்களுக்கு வேலையில் சேர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா? செய்தி துறையில், நெருக்கடி காலத்திலே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை அமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே இதையும் கருதி அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பை இழந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு ஆவன செய்யமுன்வருவார்களா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஏழு பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் துர்ப்பாக்கியவசமாகக் காலமாகிவிட்டார். பாக்கி ஆறு பேர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், இதைத் தவிர வேறு எங்கெங்கு அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்தால் அதை அரசு நிச்சயமாகப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இன்னொரு கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். இந்த மடங்கள் இவைகளின் நிர்வாகத்திற்குள்ளே இருக்கின்ற ஆலயங்களையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று இத்தனை ஆண்டுக்காலமாக எந்தக் காரணத்தின் அடிப்படையிலே அல்லது வேறு சிக்கல்களின் அடிப்படையிலே அல்லது வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இது விடப்பட்டிருக்கிறதோ அதுதான் இப்பொழுது தொடர்ந்துகொண்டிருக்கிறது. என்றாலும் அவைகளை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மஞ்சத்தட்டை' பகுதியை சுற்றுலா மையமாக்கல்

* வினா எண் 463—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி பணகுடிக்கு மேற்காக உள்ள மேற்கு மலைத்தொடரிலுள்ள குமரி மாவட்டத்தைச் சார்ந்த மஞ்சத்தட்டை என்ற இடத்தைச் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை,